விசாரணையில் போலீஸார் தாக்கியதாக உறவினர்கள் குற்றச்சாட்டு

# நீலாங்கரை காவல் நிலையத்தில் இளைஞர் மர்ம மரணம்

## ● மாஜிஸ்திரேட் விசாரணை தொடக்கம்

■ சென்னை

சென்னையில் பல்வேறு திருட்டு வழக்குகளில் தொடர்புடைய இளைஞர், போலீஸ் விசாரணையின்போது நீலாங்கரை காவல் நிலையத்தில் உயிரிழந்தார். இதுதொடர்பாக மாஜிஸ்திரேட் விசாரணைக்கு உத்தரவிடப்பட் டுள்ளது.

பெரும்பாக்கம் கண்ணகி நகரைச் சேர்ந்தவர் அந்தோணி (21). இவர் மீது பழவந்தாங்கல், தாம்பரம் காவல் நிலையங்களில் செல்போன் திருட்டு, செயின் பறிப்பு உட்பட சுமார் 8 வழக்குகள் உள்ளன. நீலாங்கரை, துரைப்பாக்கம் காவல் நிலையங்களிலும் வழக்குகள் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், அந்தோணி மற்றும் அவரது நண்பர்களான ரமேஷ், ஆனந்தன் ஆகியோரை ஒரு வழக்கு விசாரணைக்காக நீலாங்கரை குற்றப்பிரிவு ஆய்வாளர் ரஞ்சித்குமார் தலைமையிலான தனிப்படை போலீஸார் நேற்று அதிகாலை 2 மணிக்கு நீலாங்கரை காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

சுமார் 2 மணி நேரத்துக்கு போலீஸார் சரமாரியாக விசாரணை நடத்திய நிலையில், அதிகாலை 4 மணி அளவில் அந்தோணி திடீரென மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து, அருகே உள்ள தனியார் மருத்துவமனைக்கு போலீஸார் அவரை அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவக் குழுவினர் அவர் ஏற்கெனவே உயிரிழந்து



▲ அந்தோணி

விட்டதாகத் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து தென் சென்னை கூடுதல் காவல் ஆணையர் எம்.சி.சாரங்கன், இணை ஆணையர் மகேஸ்வரி, துணை ஆணையர் சசாங்சாய் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். காவல் நிலையத்தில் வைத்து அந்தோணியிடம் விசாரணை நடத்திய போலீஸாரிடம் தனித்தனியாக விசாரணை நடத்தினர்.

பின்னர், வெளியே வந்த கூடுதல் ஆணையர் எம்.சி.சாரங்கன் கூறியபோது, "காவல் நிலையத்தில் அந்தோணி மரணம் அடைந்துள்ளதால் இது குறித்து மாஜிஸ்திரேட் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணை முடிவில், அந்தோணி இறப்புக்கான காரணம் தெரியவரும். அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

இதற்கிடையில், உயிரிழந்த அந்தோணியின் உறவினர்கள் நீலாங்கரை காவல் நிலையம் முன்பு திரண்டனர். போலீஸாரின் கொடூரத் தாக்குதலில்தான் அந்தோணி உயிரிழந்துள்ளார். எனவே, சம்பந்தப்பட்ட போலீஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இந்நிலையில் ஆலந்தூர் மாஜிஸ்திரேட் நேற்று இரவு இது குறித்த தனது விசாரணையைத் தொடங்கினார்.


## தி இந்து

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான டி.எச்.ஜி பப்ளிஷிங் பிரைவேட் லிமிடெட் /கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர்,இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்த சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.



வருந்துகிறோம்!

இரங்கல்

TWENTY SECOND ANNIVERSARY





Mrs.JANAKI RAMACHANDRAN
wife of Late Dr.M.G.R
Date of Demise: 19/05/1996
"Forever in our hearts"
*Dr. Latha Rajendran*
*Dr. Selvi Rajendran*
*Mr. Kumar Rajendran*
*and Family*


கியூபா தலைநகர் ஹவானாவில் நடந்த

# விமான விபத்தில் 107 பேர் பலி?

## ● உயர்நிலை விசாரணைக்கு உத்தரவு

■ ஹவானா

கியூபா தலைநகர் ஹவானாவில் இருந்து புறப்பட்ட பயணிகள் விமானம் நேற்று தீப்பிடித்து வெடித்துச் சிதறியது. இதில் பயணம் செய்த 107 பேர் பலியாகி இருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கியூபா தலைநகர் ஹவானாவில் இருந்து அந்த நாட்டின் ஹோல்ஜியூன் நகருக்கு பயணிகள் விமானம் நேற்று புறப்பட்டது. இந்த விமானத்தில் விமானி, பணிப்பெண்கள், பயணிகள் உட்பட 107 பேர் இருந்தனர்.

ஓடுதளத்தில் இருந்து விமானம் மேலே எழும்பிய சிறிது நேரத்தில் தீப்பிடித்து வெடித்துச் சிதறியது. இதில் விமானத்தில் பயணம் செய்த 107 பேரும் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. சம்பவ பகுதியில் தீயணைப்பு வாகனங்களும் நூற்றுக்கணக்கான வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து உயர்நிலை விசாரணைக்கு கியூபா அரசு உத்தரவிட்டுள்ளது. பழைய விமானம் என்பதால் தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமானத்தில் தீ பற்றி விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.


பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்
CIN : L29130TN1961PLC004466
(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)
பதிவு அலுவலகம் : ஹாடோ கார்டன்ஸ், செம்பியம், சென்னை – 600 011.
இணையம் : www.bimite.co.in மின்னஞ்சல் : vidyashankar@bimite.co.in

அறிவிப்பு

மார்ச் 31, 2018 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகளை பரிசீலிப்பதற்காக, ஏற்றுக்கொள்வதற்காக மற்றும் பதிவில் எடுத்துக் கொள்வதற்காக மற்றும் மார்ச் 31, 2018 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஈவுத்தொகை அறிவிப்பை கருத்தில் கொள்ள நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவின் கூட்டமானது 30.5.2018 புதன்கிழமை அன்று நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்டிற்காக,
கே. வித்யா சங்கர்
நிறுவனச் செயலாளர்

சென்னை
18.05.2018



இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
Indian Overseas Bank
மத்திய அலுவலகம் 763, அண்ணா சாலை, சென்னை - 600 002.

அறிவிப்பு

செபி (கட்டுப்பாடுகள் பட்டியலிடுதல் மற்றும் தெரிவித்தல் தேவைகள்) நெறிமுறைகள் 2015-ன் நெறிமுறை 47-க்கு இணங்க 31 மார்ச் 2018ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் நிதி ஆண்டிற்கான வங்கியின் தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையை பரிசீலித்து ஒப்புதல் வழங்குதல், 31 மார்ச் 2018 அன்று நிறைவடைந்த ஆண்டிற்கான ஈவு தொகை ஏதேனும் இருப்பின், பரிந்துரைத்தல் மற்றும் வருடாந்திர பொதுகூட்டம் நடைபெறும் தேதி மற்றும் அது சம்பந்தப்பட்ட அலுவல்களுக்காக வங்கியின் இயக்குநர்கள் குழுவின் கூட்டம் வருகிற மே 28.05.2018 அன்று சென்னையில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இடம் : சென்னை
தேதி : 16.05.2018

R. சுப்பிரமணியகுமார்
நிர்வாக இயக்குநர் & சி.இ.ஓ



வரி விளம்பரங்கள் www.thehindu



Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of THG PUBLISHING PVT LTD., and Printed by D. Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kanc